VAALIPAN MINISTRIES
SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 115 | வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை | பங்குனி - 2018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,


"எமது ஆண்டவரும் இரட்சகரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வாலிபனின் 115வது இதழினூடாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மாதம் முழுவதும் கிறிஸ்துவின் மகிமை மிக்க எருசலேம் பவனி, இறுதி பஸ்கா, அவருடைய பாடுகள், வேதனைகள், அவருடைய மகத்தான சிலுவைத் தியாகம் மற்றும் வல்லமையான உயிர்த்தெழுதல் போன்ற பல்வேறுபட்ட நிகழ்வுகளுக்குள் கடந்து செல்லப்போகிறோம். இக்காலங்கள் உங்களுடைய வாழ்க்கையிலும் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுத்தி கிறிஸ்துவிடம் இன்னுமதிகமாய் கிட்டிச்சேர்ப்பதாய் அமையுமென விசுவாசிக்கிறேன்.

இவ்வூழித்தில் எம்மோடு இணைந்து கர்த்தருக்காய் ஏதாவது செய்யவேண்டுமென வாஞ்சிப்போர், தங்களது ஆக்கங்களையும், ஆலோசனைகளையும் எமக்கு அனுப்பிவையுங்கள். மேலும் எமது சஞ்சிகையை உங்களது வீடுகளில் பெற விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள். இவ்வூழியம் வளரவும், அநேக இதயங்களை ஆறுதல் படுத்தவும் தயவாக எம்மை உங்கள் தனிப்பட்ட, குடும்ப ஜெபங்களில் தாங்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்தும் வாலிபன் ஊழியங்களை பல்றே விதங்ளில் தாங்குகின்ற அனைவரையும் ஜெபத்துடனும், நன்றியுடனும் நினைவுகூருகின்றேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்
**ஆசிரியர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆயிரம் ஊழியர்கள் இருந்தாலும் நான் மிக மிக நேசிக்கும் / ரசிக்கும் ஓர் தேவமனிதர் இவரே..! சென்ற மாதத்தில் நம்மை விட்டு பிரிந்த Dr. Billy Graham பற்றி சில முக்கிய விபரங்கள் இதோ....

பில்லி கிரஹாம் (பிறப்பு: நவம்பர் 7, 1918) அமெரிக்காவைச் சேர்ந்த வல்லமையான சுவிசேஷகர்.

தெற்கத்திய Baptist Church ஊழியராக ஆரம்ப காலத்தில் இருந்தவர் இவர்

உலகக் கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபல மடைய ஆரம்பித்தது 1949ல் தான். இவர் மிகப்பெரிய Open Stages கூட்டங்களை நடத்தி மக்களை ஈர்த்தார்.

இவரது வானொலி மற்றும் தொலைக்காட்சி பிரசங்கங்கள் இன்றும் பல நாடுகளில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

இவர் அமெரிக்காவின் பல அதிபர்களுக்கு ஆன்மீக ஆலோசகராக இருந்துள்ளார்.

அவர்களில் டுவைட் டி ஐசன்கோவர், லிண்டன் ஜான்சன் மற்றும் ரிச்சர்டு நிக்சன் போன்றோர் இவருக்கு மிகவும் நெருக்கமானவர்களாக அறியப்பட்டனர்.

குடிசார் உரிமைகள் இயக்கம் அமெரிக்காவில் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இவர் தனது எழுப்புதல் கூட்டங்களுக்கு வரும் இருவினத்தவருக்கும் ஒரே மாதிரியான நாற்காலிகள் வழங்கப்பட வேண்டும் என கோரினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் தொடர்ச்சியாக 1957ம் ஆண்டு நியூயார்க் நகரத்தில் நடந்த கூட்டத்தில் அவ்வியக்கத்தின் தலைவரான மார்ட்டின் லூதர் கிங்கை தன்னுடன் சேர்ந்து போதிக்க அழைத்தார். மேலும் 1960ம் ஆண்டு திரு கிங் அவர்கள் கைது செய்யப்பட்டபோது இவர்தான் அவரை பிணையில் எடுத்து சிறையிலிருந்து வெளியே கொண்டுவந்தார்.

பிற ஊழியர் யாராவது பிரசங்கிக்கும் போது அதை தாழ்மையோடு கேட்டு ரசிப்பார் பிரசங்க குறிப்பையும் எழுதி எடுப்பார்.

21.5 கோடி மக்களுக்கு 185 நாடுகளில் தன்னுடைய கணீர் குரலால் சுவிஷேசம் அறிவித்திருக்கிறார்.



இவரை பற்றிய சில விசேஷங்கள்:

1. இவருக்கு முன்னும் இவருக்கு பின்னும் இவரின் ஊழியத்தில் கூடியது போல் வேறு எவருக்கும் ஜனக்கூட்டம் கூடியது இல்லை.
2. சபைகளுக்குள்ளேயே சுற்றிக் கொண்டிராமல் OpenStagesகளில் புது ஆத்துமாக்களுக்கே சுவிசேஷம் அறிவித்தார்.
3. அற்புதங்கள், தீர்க்கதரிசனங்கள் பிசாசு துரத்துதல் போன்றவைகள் இவரின் ஊழியத்தில் இடம் பெறவேயில்லை ஆனால் ஆத்தும அறுவடையில் இவரின் சாதனையை இது வரை யாரும் முறியடிக்க முடியவில்லை...
4. "வேதம் சொல்லுகிறது" என்ற வார்த்தையை பிரசங்கத்தில் அடிக்கடி இவர் உபயோகிப்பார். பிரசங்கத்தின் முடிவில் பல்லாயிரம் பேர் தங்கள் பாவங்களிலிருந்து கண்ணீரோடு மனந்திரும்புவார்கள்.
5. இவர் மேடையில் நின்று தேவ வார்த்தையை பேசும் போது ஆகாயத்தில் நிற்பது போலவே உணருவாராம்...
6. வெற்றிகரமான சுவிசேஷகர் ஒரு வேத வல்லுனராகவும் இருப்பது அவசியம் என்பதை உணர்தியவர் இவர்.
7. வெற்றியின் ரகசியத்தை ஒரே வார்த்தையில் "ஜெபம்" என்று சொல்லி முடித்தவர் இவர்.
8. பாவ மன்னிப்பு / பரலோகம் / நரகம் / நித்தியம் / இயேசுவின் ரத்தம் / இரட்சிப்பு / நியாயத்தீர்ப்பு / பாவம் / சிலுவை / தேவ அன்பு போன்ற வார்த்தைகள் இவரின் பிரசங்கத்தில் நிறைந்து காணப்படும்.
9. குடும்ப வாழ்வில் மிகவும் சாட்சியோடு வாழ்ந்தவர்.
10. அமெரிக்க ஜனாதிபதி ஆகும் வாய்ப்பு இருந்தும், அதை ஏற்க மறுத்து "சுவிசேஷகர்" என்ற ஸ்தானத்தையே உலகின் மிக உன்னத ஸ்தானமாக கருதினார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# விலையேறப்பெற்ற முத்து

சகோதரி. எமிலி எனிட்

"கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபேசியர்2:8-9)

சுவிசேஷ பாரத்தின் நிமித்தம் தன் சொந்த தேசத்தைவிட்டு அந்நிய தேசத்துக்கு வந்த ஒரு மிஷனரியும், உள்ளூரிலே முத்துக்குளிப்பவராய் இருந்த ஒரு வயதான வரும் நெருங்கிய நண்பர்களானார்கள். அவனுடைய குடிசையில் மணிக்கணக்காக இருந்து வேதத்தை வாசித்து அவனுக்கு இரட்சிப்பின் வழியைப் போதித்து வந்தார். அந்த முத்துக்குளிப்பவரும் ஆர்வத்தோடு கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு வந்தாலும், மிஷனரி அவனிடம் கர்த்தரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளச் சொல்லும்போதெல்லாம், "பரலோகத்திற்குச் செல்ல உங்கள் கிறிஸ்தவ மார்க்கம் சொல்லும் வழி மிகவும் எளிதானது. அப்படி நான் ஏற்றுக்கொண்டு போனால், ஏதோ தேவன் என்மேல் இரக்கப்பட்டு பிச்சையாக ஒரு இடத்தைக் கொடுத்தது போல இருக்கும். அப்படியல்லாமல் எனக்கென்று ஒரு இடத்தை நானே உழைத்துப் பெறப்போகிறேன்" என்று கூறினான். மிஷனரி என்ன சொன்னாலும் கேட்கும் நிலையில் அவனில்லை. இப்படியே வருடங்கள் உருண்டோடின.

ஒருநாள் அந்த முத்துக்குளிப்பவர் மிஷனரியிடம் வந்து 'ஐயா தயவுசெய்து எனது வீட்டிற்கு வாருங்கள்,ஒரு முக்கியமான செய்தியை உங்களிடம் சொல்லவேண்டும்' என வருந்தி அழைத்தார். அந்த மிஷனரியும் ஒருநாள் அங்கு சென்றபோது, முத்துக்குளிப்பவர் அவரைப்பார்த்து 'நான் இப்போது பரலோகத்தில் எனக்காக ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணப் புறப்படப்போகிறேன், அதற்காக எனது இச்சிறிய கிராமத்திலிருந்து தலைநகரை நோக்கி என் முழுங்காலிலேயே செல்லப்போகிறேன், இன்னும் சிலநாட்களிலேயே புறப்பட்டு விடுவேன்' என்று கூறினார். அதற்கு மிஷனரி 'உனக்கென்ன பைத்தியமா?அத்தனை தூரத்தையும் எப்படி முழுங்காலிலேயே கடந்துசெல்ல முடியும்? உன் முழுங்கால்களின் நிலை என்னாவது என்று யோசித்தாயா? வேண்டாம் இது விபரீதமான காரியம்' என்று பதறிப்போய் வேண்டினார். ஆனால் முத்துக்குளிப்பவர் 'நீர் என்ன சொன்னாலும்சரி, நான் போய்த்தான் ஆகவேண்டும், என்னுடைய உபத்திரவம் இனிமையாகத்தான் இருக்கும், ஏனென்றால் அது எனக்கு பரலோகத்தில் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை வாங்கிக்கொடுக்கும்' என்றார். அப்போது மிஷனரி "இல்லை அது உனக்கு இடத்தை ஆயத்தம்பண்ணாது.இயேசுகிறிஸ்து உனக்காக மரித்து இரட்சிப்பை இலவசமாக வாங்கிக் கொடுத்திருக்கிறார். அவருடைய கிருபையே உனக்கு பரலோகத்தில் இடம் வாங்கிக்கொடுக்கும்" என்று கூறியபோதும், அம்முத்துக்குளிப்பவர் "இல்லை ஐயா, நீர் என்ன சொன்னாலும் நான் என் முடிவை மாற்றிக்கொள்ளப்போவதில்லை" என்று முடிவாகக் கூறிவிட்டு உள்ளே சென்று ஒரு சிறிய பெட்டியை அவரிடம் கொண்டு வந்து "ஐயா இந்தப் பெட்டி அநேக வருடங்களாக என்னிடம் இருக்கிறது. எனக்கு ஒரு மகன் இருந்தானென்று இழுத்தான். அதைக்கேட்ட அம்மிஷனரி "இதைப்பற்றி நீ என்னிடம் எதுவுமே கூறவில்லையே" எனக்கேட்டார். அப்போது அவன், கண்ணீருடன் "ஆம் ஐயா எனக்கு ஒரு மகன் இருந்தான், அவனும் முத்துக்குளிப்பவன், ஆனாலும் அவன் அதில் மிகச்சிறந்தவன் அநேக முத்துக்களை சேகரித்து என்னிடம் கொண்டுவந்து கொடுப்பான், ஒருமுறை அவன் மிகவும் பிரயத்தனப்பட்டு மிக ஆழத்தில் போய் மிகப்பெறுமதியான ஓர் முத்தை என்னிடம் கொடுத்தான். அந்த முத்து மிகவும் விலை உயர்ந்தது. ஆனால் அது என் மகனின் உயிரை வாங்கிவிட்டது. அம்முத்தை என்னிடம் கொடுத்துவிட்டு அவன் மரித்துப் போனான். நான் இப்போது தலைநகர் போகிறேன், திரும்பவும் நான் திரும்புவேனோ? என்று எனக்குத் தெரியாது, ஆகவே எனக்குப் பிரியமான உங்களுக்கு இதை கொடுக்க முடிவு செய்தேன், தயவாக இதை ஏற்றுக் கொள்ளுங் கள்" என்று கண்ணீருடன் அதை அவரிடம் கொடுத்தான்.

மிஷனரி அதை பார்த்தபோது, அவரால் பேசமுடியவில்லை. அந்தளவு மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் அம்முத்து பளிச்சிட்டது. உடனே அவர் மனதில் மின்னலைப் போல ஒரு எண்ணம் பளிச்சிட்டது. இத்தருணத்திற்காகத்தானே அவரும் இத்தனை நாட்களாகக் காத்திருந்தார். இயேசுகிறிஸ்துவின் தியாகத்தைக்குறித்துச் சொல்ல. ஆகவே உடனே முத்துக்குளிப்பவரிடம், "சரி, இதை நான் எடுத்துக் கொள்கிறேன், ஆனால் அதற்கு நான் கிரயம் செலுத்துவேன்" என்று கூறினார். அப்போது முத்துக்குளிப்பவர் "இந்த முத்து மிகவும் விலைஉயர்ந்தது. இதற்கு என்ன விலை கொடுத்தாலும் போதாது, உங்களுக்கு நான் இதைப் பரிசாகத்தான் தருகிறேன்" என்று கூறினார். அப்போது மிஷனரி,"இல்லை, இதைப் பெறுவது எனக்கு மிகவும் பெருமை, ஆகவே இதற்குரிய விலையை நான் உழைத்துக் கொடுத்தே ஆவேன்" என்றார். அதற்கு முத்துக்குளிப்பவர் "ஐயா உமக்குப் புரியவில்லை, என்னுடைய ஒரே மகன் தன்னுடைய உயிரையும், இரத்தத்தையும் கொடுத்து இம்முத்தை எடுத்துக் கொடுத்திருக் கிறான், அதற்கு என்ன விலை கொடுத்தாலும் ஈடாகாது, இதை நான் விற்கவும் முடியாது, இதை உமக்கு இலவசமாய் தருகிறேன்" என்று கவலையுடன் கூறினான்.

அப்போது மிஷனரி அவனை நோக்கி "மகனே இதைத்தானே இத்தனை நாட்களாக உன்னிடம் கூறி வந்தேன். தேவன் உனக்கு இரட்சிப்பை இலவசமாகக் கொடுத்திருக்கிறார். அது மிகவும் விலையேறப்பெற்றது. அதை எந்த மனிதனுமே விலை கொடுத்து வாங்கமுடியாது.எவனாலும் சம்பாதிக்கவும் முடியாது. ஏனெனில் பிதாவானவர் தன்னுடைய ஒரே குமாரனை இந்த உலகத்திற்குள் அனுப்பி அவருடைய மாசில்லாத இரத்தத்தை சிந்தி, இரட்சிப்பைக் கொடுக்க வைத்தது. உன்னுடைய இந்தப் புண்ணிய யாத்திரையும், இந்தக்

தொடர்ச்சி 8ம் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.



"பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள் நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்"

**(சங்கீதம் 100:1-3)**

# ஏன் தேவனை ஆராதிக்க வேண்டும்

**தே**வனை ஆராதிப்பதின் எண்ணமும், வாஞ்சையும் பிறப்பிலேயே நம் உள்ளத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து யாரோ ஒருவர் கற்றுக் கொடுப்பதுமில்லை அல்லது பழக்குவிப்பதும் இல்லை. மாறாக, பிறப்பிலே தேவனால் உருவாக்கப்பட்டுள்ளது. காட்டுவாசியைப் பார்த்தாலும், படித்தவர்களைப் பார்த்தாலும் தேவனை ஆராதிக்கிறார்கள். சிலர் பணத்தையும், சிலைகளையும், இன்னும் சிலர் முற்பிதாக்களையும் மற்றும் மரித்த ஆவிகளையும் ஆராதிக்கிறார்கள். கேள்வி நாம் ஆராதிப்பதைப் பற்றி அல்ல, ஆனால் யாரை ஆராதிக்கிறோம் என்பதே! ஏதாவது ஒரு குறிக்கோளை வாழ்க்கையில் முன்குறித்து அடைய பிரயாசப்பட்டிருக்கிறீர்களா? ஒருவேளை அதை அடைந்த பிற்பாடு உண்மையான திருப்தியை பெற்றிருக்கிறீர்களா? இல்லை. ஒரு வெறுமையை தான் உணர முடியும். பொதுவாக ஒரு மனிதனுடைய வாழ்க்கை செழிப்பாக இருக்க பணம் அவசியம். ஆகவே அதை சம்பாதிக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு ஒருவேளை நீங்கள் இருக்கக் கூடும். அப்படியே அதை நீங்கள் அடைந்த பிற்பாடுங் கூட உங்கள் வாழ்வில் ஏதாவது மாற்றங்கள் அடைந்து முடிந்திருக்கும் என்று நினைக்கிறீர்களா? அந்த பணம் வந்த பிற்பாடு பிரச்சினைகளும், கடன்களும் கூடவே வரும். அதோடு இன்னும் கொஞ்சம் அதிகமாக சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி அது நமக்கு ஆசையாக மாறும். ஆனால் இவை எல்லாம் நம்முடைய வாழ்வில் அடி மனதில் ஒரு வெறுமையைக் காட்டும். இந்த வெறுமையை கர்த்தர் ஒருவரே மாற்ற முடியும். ஆனால் இன்று மனிதர்கள் உள்ளத்திலிருக்கும் வெறுமையை மாற்றுவதற்க்காகக் காதலர்களைத் தேடுகிறார்கள், நல்ல நண்பர்களைத் தேடுகிறார்கள், சின்னச் சின்ன இன்பங்களைத் தேடுகிறார்கள். இவைகள் சிறிது நேரம் சந்தோஷம் போல் காணப்படும், ஆனால் தனிமையாய் இருக்கும் பொழுது இவைகள் எல்லாம் மாயையும், வேதனையும் என்றுத் புரிந்து அந்த வெறுமை இன்னுமதிகமாய் எம்மை வதைக்க ஆரம்பிக்கும்.

இந்த வெறுமையை எப்படி மாற்ற முடியும்? ஆதியிலே பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாக இருந்தது. தேவன் அதை சீர்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையாக மாற்றினார். நம்மைப் படைத்த ஆண்டவரோடு தனிப்பட்ட முறையில் தொடர்பு வைத்து ஐக்கியப்படும்பொழுது மாத்திரமே அந்த வெறுமை நம்மிலிருந்து முழுவதுமாக அகற்றப்பட்டு, சந்தோஷமும் சமாதானமும் நிறைந்த வாழ்க்கை நிலையினை அடைய முடியும். வாழ்க்கைக்கான சரியான அர்த்தத்தை விளங்கிக் கொள்ளவும் முடியும். நெருங்கி ஐக்கியத்தை ஏற்படுத்துவது ஆராதனையின் ஒரு பகுதி. ஆகவே உண்மையாக தேவனை ஆராதிப்பதன் மூலமாக அந்த வெறுமை மாற்றப் பட்டு ஒரு பரிபூரண ஜீவியத்தை அனுபவிக்க முடியும். ''முதலாவது தேவனுடைய ராஜ்யத் தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்". (மத்தேயு6:33)

ஆராதனை (பூஜை,தொழுகை) என்றால் தகுதியில்லாத நமக்கு கொடுக்கப்பட்ட காரியங்களின் கனத்தை, மகிமையை ஆண்டவருக்கு செலுத்துவதுதான் ஆராதனை. நம்மையே தேவனுக்கு பரிசுத்தமாக அர்ப்பணிப் பது புத்தியுள்ள ஆராதனை. ஆராதனையின் சாராம்சம் இருதயத்தின் ஆழத்திலிருந்து வெளிக்கொண்டு வரும் அன்பு, துதி, மரியாதை மற்றும் புகழை ஆண்டவருக்கு செலுத்துதல். நிம்மதியை வேறெங்கும்தேடி அலைய வேண் டாம் தேவனுக்கு ஆராதனை செலுத்துங்கள் நிம்மதி உங்களை தேடி வரும். "கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத் துங்கள் பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்". (சங்கீதம்29:2)

## 06 பக்க தொடர்ச்சி...

காணிக்கைகளும், எந்த நற்கிரியைகளும், எந்தத் தியாகமும் அதற்கு ஈடாகாது. ஆனால் நான் ஓர் பாவி என்று உணர்ந்து, அவரிடத்தில் வந்து, அவருடைய இரட்சிப்பை பெற்றுக் கொண்டால் அதுவே உன்னை பரலோகத்தில் சேர்க்கும். நான் உன்னுடைய அன்பின் பரிசாக இந்த முத்தை தாழ்மையோடு பெற்றுக் கொள்கிறேன், நீ தேவனின் அந்த விலையேறப் பெற்ற இரட்சிப்பை, தம்முடைய ஒரே மகனையே கொடுத்து பெற்ற இரட்சிப்பை நீயும் பெற்றுக் கொள்வாயா?" என்று உருக்க மாகக் கேட்டார். அப்போது அந்த வயதான முத்துக்குளிப்பவருக்கு புரிய ஆரம்பித்தது. அவர், "ஐயா இப்போது எனக்குப் புரிகிறது. மூன்று வருடங்களாக இயேசுகிறிஸ்துவை குறித்து கேள்விப்பட்டேன், ஆனால் அவருடைய இரட்சிப்பு இலவசம் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் இப்போது எனக்குப் புரிந்துவிட்டது. சில காரியங்களை என்ன கிரயம் கொடுத்தாலும் வாங்க முடியாது. இதோ, இரட்சிப்புக்கு என்னை முழுவதுமாக அர்ப்பணிக்கிறேன்" என்று கூறி இந்த இனிமை யான அனுபவத்துக்குள் கடந்து சென்றார்.

அன்பான சகோதரர்களே! நாம் எத்தனை கோடி கொடுத்தாலும் தேவன் தம் ஒரேபேறான குமாரனின் இரத்தத்தைச் சிந்தி பெற்றுக்கொடுத்த இரட்சிப்பை சம்பாதிக்க முடியுமா? அவருடைய இரட்சிப்பை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள கிருபை செய்தாரே, நாம் எத்தனை பாக்கியவான்கள். அவர் நம்மீது பாராட்டுகிற அன்பு எத்தனை பெரியது. நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் நிச்சயத்தை அவரை அறியாது வாழ்ந்து கொண்டிருக்கும் அநேக மக்களுக்கு எடுத்துச் செல்லவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். எம்மால் முடிந்தவரை இந்த நற்செய்தியை அறிவித்து அநேகரை இரட்சிப்பின் பாதையில் வழிநடத்துவோமா?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 109 இற்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சவரகன்கத்தி
4.திராணி
6.புசிவப் (சிவப்பு)
8.எஸ்றா
9.வழிகள்

**இடமிருந்து வலம்**

1.சத்தியம்
2.களஞ்சியங்கள்
3.தித்திப்பும்
5.ணிஏ (ஏணி)
7.புறா

**குறுக்ககெழுத்துப்போட்டி 110ற்கான வெற்றியாளர்**

வெற்றியாளர் இல்லை

**இப் போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான இவ்இதழைத் தொடர்ந்து பெறுவார்**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப் போட்டி இல. 112,**
**"வாலிபன்"**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

**குறுக்கெழுத்துப் போட்டி 112 ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி**
**25.04.2018**

## வாலிபனுக்கு என் வாழ்த்துக்கள்




கோட்டைமுனை வாலிப முத்துக்களே கோடி வந்தனங்கள் இயேசுவின் நாமத்தில் வாலிப பராயத்தில் சிருஷ்டிகரை நினைந்து வாலிபன் சஞ்சிகையை முன் நின்று நடாத்தி வானளாவ பரவ உழைத்த உங்களை வாலாக் காமல் கர்த்தர் தலையாக்கி வைத்திருக் கின்றார். பத்து வருடங்கள் வாலிபன் சிறப்பாக நடைபோட பக்தியோடு நீங்கள் செய்த இச்சேவை பாமரர்க்கிடையே புத்துணர்வு தோன்றியதால் பாராட்டிமென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

சிந்தித்துச் செயற்பட குறுக்கெழுத்துப் போட்டி சிறுவர்களுக்கோ சித்திரம், வேத வினாவிடைப் போட்டி எத்தனை வேத போதனைகள், விளக்கங்கள், கதைகள் அத்தனையும் தாங்கி நடைபோடும் வாலிபனே இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்தும் வெளிவர இயேசுவின் துணையோடு நீங்கள். இனிய இப்புத்தாண்டு முழுவதும் இன்புற்று நலமுடன் வாழ, வளர வாழ்த்துகின்றேன்.

திருமதி. V.A. தியாகராஜா
கோட்டைமுனை. மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. : 112

உருவாக்கம் : N.கோபிகா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | 3 |
| | | | | | 4 | | |
| 5 | | | | | | | |
| | | | | 6 | | | |
| | | | | | | | |
| | | 7 | | | | | 8 |
| | | | | | | | |
| 9 | | | | | | | |

## இடமிருந்து வலம்

1. இவள் மோசேயின் மனைவி
5. இரத்தினங்களில் ஒன்று குழம்பியுள்ளது
6. பார்வோனுக்காகக் கட்டப்பட்ட பட்டணங்களில் ஒன்று
7. உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் ............ அழிந்து போயிருப்பேன் (இடைவெளியில் வரவேண்டியது)
9. கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப் போல, ஒரு தீர்க்கதரிசியும் இங்கு அப்புறம் எழும்பினதில்லை.

## மேலிருந்து கீழ்

1. அவர் இவனைப் புழுதியிலிருந்து தூக்கி விடுகிறார்.
2. இவன் ரூத்தை விவாகம் பண்ணினான்.
3. அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் என்று சொல்லி, மோசே தன் குமாரனுக்கு இவ்வாறு பெயரிட்டான்.
4. மாம்சத்தின் உயிர் இதில் இருக்கிறது.
7. காதேசுக்கும் பாரேத்துக்கும் நடுவே இருக்கும் இதற்கு லகாய்ரோயீ என்னும் பெயர் (குழம்பியுள்ளது)
8. என் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்ற படியால், அவர் இப்பொழுது என்னோடே சேர்ந்திருப்பார் என்று சொல்லி, லேயாள் தன் குமாரனுக்கு இவ்வாறு பேரிட்டாள்.



# இயலாது இயலாது அப்பா சாவைத் தா நீ...

- சகோ. R.கஜாவினி -

மனுக்குலத்தை மீட்கும் திட்டத்தை உருவாக்கிய பிதா, வார்த்தையானவர் மூலம் அத்திட்டத்தை ஆதாமுக்கே அறிவித்து அதற்கான செயல்களை ஒழுங்கு முறையாக செய்து வந்தார் என்பது நாம் அறிந்ததே! இந்நிலையில் பிதாவின் முழுமையாக நிறைவேற்ற வந்த வார்த்தை யானவர் இயேசு கிறிஸ்து சிலுவையிலே மொழிந்த நான்காம் வார்த்தை நமக்குள் ஓர் குழப்பத்தை ஏற்படுத்தவில்லையா? 'என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்...??" பிதாவின் திட்டத்தை / சித்தத்தை ஒவ்வொன்றாக நிறைவேற்றிய வார்த்தையானவர் இப்படி சத்தமிட்டாரா? இப்படி சொல்லயிருப்பரா?

பல பிரசங்கியாளர்கள் செய்த பிரசங்கங்களிலே நமது பாவச் சுமைகள் இயேசுகிறிஸ்துவின் மேல் விழுந்ததனாலே பிதா மறைக்கப்பட்டுப் போனார். இதனால் தான் இயேசு கிறிஸ்து அவ்வாறு கூறினார் என்று கூற கேட்டிருக்கிறேன். ஆனாலும் என் உள்ளத்தில் ஒரு உறுத்தல் இருந்து கொண்டேயிருந்தது. ஏன் இயேசப்பா இப்படி கூறினார்?

என் மன உறுத்தலுக்கு பதில் கிடைக்கவே, நான் ஆனந்தக் களிப்பில் மிதந்தேன். என் இயேசப்பா ஒரு முழு மனிதனாக இருந்ததனாலேயே பிதாவைப் பார்த்து கேள்வி கேட்டார் என்பது உண்மையன்று மாறாக, பிதாவை நோக்கி விண்ணப்பம் பண்ணினார் என்பதே சத்தியம், 'இயலாது இயலாது அப்பா சாவைத் தா நீ"

எந்த மொழி வேதாகமத்திலும், இயேசுகிறிஸ்து சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகளிலும் நான்காம் வார்த்தையை மொழிமாற்ற விளக்கத் துடனே எழுதியிருக்கிறார்கள். ஏலி/எலோயி ஏலி/எலோயி லாமா சபத்தானி" என்று சத்தமிட்டுச் சொன்னார். அதற்கு 'என் தேவனே என் தேவனே ஏன் என்னை கை விட்டீர் என்று அர்த்தமாம்.

தொடர்ச்சி 13ம் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுகிறிஸ்துவின் சிலுவை

சகோதரி . K. ஜான்சி

இயேசு கிறிஸ்து சிலுவையில் என்ன செய்தார்? எதற்காக செய்தார்? யாருக்காக செய்தார்?

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு! இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்கள்.

(ஆதி 22:8) அதற்கு ஆபிரகாம் என் மகனே தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான்....

கிறிஸ்து பிறப்பதற்கு 2000 வருடங்களுக்கு முன்பு மோரியா மலையின் மேல் வைத்து விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் இயேசுவின் ஒரு நிழலான ஈசாக்கிடம் சொன்ன ஒரு தீர்க்கதரிசன வசனம் இது. தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார். உண்மையில் தேவன் தமக்கு தகன பலிக்கான ஆட்டுக்குட்டியை உலகத்துவகக் முதலே பார்த்துக் கொண்டார். (வெளி 12:8) இந்த ஆட்டுக்குட்டியைத்தான் ஈசாக்கு 'தகன பலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே? என்று கேட்டார். இந்த ஆட்டுக்குட்டியைத்தான்." இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான் பதில் சொல்கிறார். இந்த ஆட்டுக்குட்டியை புகழ்ந்து தான் 'அடிக்கப்பட்ட ஆட்டுக்குடியானவர்." வல்லமையையும் ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்று (வெளி 5:12)ல் ஆயிரமாயிரம் தூதர்கள் பரலோகத்தில் பாடுகிறார்கள்.

தேவன் தமக்குத் தெரிந்து கொண்ட தகனபலியாய் சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாய் கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து ஒருநாள் மரித்தார். சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட நாளில் நடந்த இந்த நிகழ்ச்சி இன்னும் பல விதங்களில் பல முறைகளில் நினைவு கூறப்படுகிறது. துக்க வெள்ளி, குருத்தோலை ஞாயிறு, சாம்பல் புதன், பெரிய வியாழக்கிழமை, லெந்து நாட்கள் என்று பலவிதமான நாட்கள் இயேசுவின் மரணத்தோடு சம்பந்தப்படுத்தி அனுசரிக்கப்படுகின்றன என்றாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமத்தில் இப்படிப்பட்ட நாட்களில் அனுசரணை குறித்து எந்த இடத்திலும் எந்த விதத்திலும் சொல்லப் படவில்லை. என்றாலும் பலரும் இந்த நாட்களிலாவது இயேசு கிறிஸ்து வின் பாடு, மரணங்கள் நினைவு கூருவதற்காக இக்காரியங்கள் உதவியாக இருக்கின்றன என்பது சற்று உண்மையான விடயம்.

இயேசுவின் சிலுவை மரணத்தை நினைவு கூரும் விதத்தில் தியானிக்கும் விதத்தில் பாரம்பரியமான பல காரியங்கள் செய்யப்படுகின்றன. அவை அனைத்தும் நல்ல காரியங்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் பேசின வார்த்தைகளை தியானிப்பது நல்லது இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைத்து கண்ணீர் விடுவது நல்லது. இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கி மரித்த நாளுக்கு முன் 7 நாட்கள், 21 நாட்கள், 40 நாட்கள் உபவாசம் இருப்பது நல்லது. இயேசு கிறிஸ்து மரித்த நாட்களுக்கு மாமிச உணவு சாப்பிடாமல் இருப்பது நல்லது. இயேசு கிறிஸ்து அனுபவித்த உபத்திரவங்களை நினைத்து நினைத்து வருத்தப்படுவது நல்லது. இயேசு மரித்த நாளில் திட உணவு சாப்பிடாமல் உபவாசம் இருப்பது நல்லது இயேசுவின் சிலுவை மரணத்தை நினைத்து அலங்காரங்கள் செய்யாமல் இருப்பது நல்லது. இவற்றை செய்வதால் எம்முடைய பாவம் தீருமா? சற்று சிந்திக்க வேண்டும். எம்முடைய பாவத்துக்காக மரித்தார். சிலுவையில் தொங்கி, கசையடி வாங்கி மிகவும் வேதனைப்பட்டார். ஆனால் நாம் அதனை வெறுமனே ஒவ்வொரு வருடமும் நினைவு கூருகிறோம். இவற்றோடு கூட இன்னும் ஒருபடி மேலாக போய் இவைகளை எல்லாம் நாம் செய்வதால் இயேசுகிறிஸ்துவுக்கும் தேவனுடைய ராஜ்யத்துக்கும் என்ன பயன் என்று நம்மை நாமே கேட்டு கொள்வது மிகவும் நல்லது எம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நாம் என்ன செய்கின்றோம். அவருடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா?

11 பக்க தொடர்ச்சி...

சிலுவையில் அடிவாரத்தில் நின்ற யாருக்கும் புரியாத ஒரு மொழியில் பேசினார் என்பது தெளிவே. அரமி மொழியுமல்ல, உரோம மொழியுமல்ல அது இயேசு கிறிஸ்து தனது ஜென்ம பாஷையில் பேசினார் என்றும் விளக்கம் கூறப்படுகிறது.

இயேசு கிறிஸ்து தனது ஜென்ம மொழியிலே பிதாவோடு பேசினார். விண்ணப்பம் பண்ணினார்.

ஆதிமொழி தமிழ் என்றும், லெமோரியாக் கண்டம் தமிழ்க் கண்டமென்றும் பல ஆய்வுகள் ஆதாரங்களைத் தர, இயேசு கிறிஸ்து பிதாவை நோக்கி கேள்வி கேட்கவில்லை. மாறாக, விண்ணப்பம் பண்ணினார் என்பதும், தமிழ் மொழியிலே 'இயலாது, இயலாது லாமா - அப்பா, சாவைத் தா நீ" என்று கேட்டார் என்பதும் இன்று நிரூபணமாகின்றது.

மொத்தத்தில், இயேசு கிறிஸ்து வானவர் முழுவதுமாக பிதாவின் சித்தத்தை 100% சரியாக நிறைவேற்றினார் என்பதும், எந்த வேளையிலும் அவர் தடுமாற்றம் அடையவில்லை என்பதும் சத்தியமே!!!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மூன்று பெண்கள்

சகோதரி . K. அனித்தா

இந்த தலைப்பை பார்த்ததும் எல்லோரும் சிந்திப்பீர்கள் இந்த சஞ்சிகையில் 'பெண்கள்" என்ற தலைப்பில் என்ன எழுதியுள்ளதோ என்று!!!

தேவன் படைத்த மனிதர்களில் எத்தனை வேறுபாடுகள். உடலமைப்பில், எண்ணங்களில் ஒருவர் மற்றவரிடமிருந்து வேறுபட்டவர் இந்தப் பகுதியில் நான் மூன்று வேறுப்பட்ட பண்புகள் கொண்ட பெண்களை பற்றி எழுதலாம் என எண்ணுகிறேன்.

நம் அனைவருக்கும் பரிச்சமயான ஒரு பகுதி தான் ரூத்தின் கதை. இப்பகுதியில் மூன்று பெண்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள் நகோமி, ஓர்பாள், ரூத். இளம் வயதில் உள்ள பெண்களுக்கு இப்பகுதி பெரும் படிப்பினையை உணர்த்துகிறது.

✦ தனித்து விடப்பட்டவள் (ரூத் 1:1-5)

சமுதாயத்தில் தனித்து வாழும் பெண்கள் நிலைமை பாதுகாப்பற்றது என்று நாம் அனைவரும் அறிந்ததே. இந்தப் பகுதியில் நகோமிக்கும் இதே நிலை ஏற்படுகிறது. இதற்கு காரணம் என்ன?

1) தவறான இடம் சென்றாள்

பெத்லகேமிலிருந்து விக்கிரகங்கள் நிறைந்த மோவாப் தேசத்திற்கு சென்றாள்.

2) தவறான தீர்மானம்

தேவன் விரும்பாத மோவாப் தேசத்திலேயே தங்கி விட்டாள்.

3) தவறான உறவு

தேவனை அறியாத மக்களிடத்தில் தன் மகன்களுக்கு பெண் கொண்டாள்.

✦ திரும்பிப் போனவள் (ரூத் 1:6-15)

வாழ்க்கையை ஆரவாரமாய் ஆரம்பித்த சில ஆண்டுகளுக்குள் ஓர்பாளும், ரூத்தும் விதவை ஆனார்கள். மாமியார் அவர்களை அவர்களது வீட்டிற்கு திரும்பி போகச் சொன்னதும் இருவரும் உம்மோடு கூட வருவோம் என்றனர். ஆனால் நகோமி மீண்டும் குடும்ப வாழ்வைப் பற்றி கூற, தன் பெற்றோரிடத்திற்குத் திரும்பிப் போனாள் வாழ்க்கையை அனுபவிக்கலாம் என்ற ஆசையில் திரும்பிப் போனாள் ஓர்பாள்.

✦ தீர்மானம் செய்தவள் (ரூத் 1:16-18)

ரூத்தின் உறுதியான தீர்மானத்தினால் அவளது சந்ததியில் இயேசு பிறந்தார். ரூத் எச்சூழ்நிலையில் தீர்மானம் எடுத்தாள்?

1) பின்வாங்கிப் போனவள் முன்

2) திரும்ப திரும்ப பின்வாங்கிப் போகச்

தொடர்ச்சி 16ம் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Bro.Paul Christy**
Colombo

# மரணமே
# உன் கூர் எங்கே

அவர் இங்கே இல்லை: தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்: கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். - (மத்தேயு 28: 6).

**ஆ**ம்! உலகினில் எத்தனையோ கல்லறைகள் எத்தனையோ கதைகளை சொல்லும். ஆனால் மன்னவர் இயேசுவின் கல்லறையோ அவர் என்னிடம் இல்லை என்றே சொல்கிறது. அவர் அங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.

யார் நம்பினாலும், நம்பாவிட்டாலும், இயேசுகிறிஸ்து பாடுகளை சகித்தது உண்மை, சிலுவையில் அறையப்பட்டது உண்மை, சிலுவையில் மரித்தது உண்மை, அதுப்போலவே அவர் உயிரோடு எழுந்ததும் உண்மை. அல்லேலூயா!

கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா - (1கொரிந்தியர் 15:12). என்னிடம் சில மதத்தை சேர்ந்தவர்கள் வந்து, கிறிஸ்து மரிக்கவில்லை என்றும், அவருக்கு பதிலாக வேறொருவர் அவருடைய உருவத்தில் வந்து மரித்தார் என்றும், கிறிஸ்து திரும்பவும் வர இருப்பதால் அவர் மரிக்க முடியாது என்றும் கூறினர். அப்போது நான் சொன்னேன், 'கிறிஸ்தவமே, அவர் மரித்து, உயிர்த்தெழுந்ததை வைத்துதான் கட்டப் பட்டிருக்கிறது. அவர் மரிக்கவில்லை, அவர் உயிரோடு எழுந்திருக்கவில்லை என்றால் கிறிஸ்தவமே இல்லை, எங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் வீணானனது ஆகும்' என்று கூறினேன்.

ஒரு நாள் இயேசுகிறிஸ்து இராஜாதி இராஜாவாக வானத்தின் மீது வருவார். அவரை குத்தின கண்கள் அவரை காணும், அவர் சிலுவை பாடுகளை சகிக்கவில்லை, அவர் மரிக்க வில்லை என்று சொல்லும் மக்களின் கண்கள், அவருடைய கரங்களின் கால்களின் ஆணிகள் கடாவப்பட்ட காயங்களை காணும். அப்போது அவர்கள் கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்திற் காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்பதை அவர்கள் கண்டு கொள்வார்கள்.

கிறிஸ்து உயிரோடு எழுந்ததால் நமக்கு நம்பிக்கை உண்டு. நமக்கு இருக்கிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கள், பிரச்சனைகளிலிருந்து விடுதலை கொடுக்க உயிரோடு இருக்கும் நேசர் நமக்கு இருப்பதால் நாம் தைரியமாக பிரச்சனைகளை எதிர்நோக்கலாம்.

கிறிஸ்து உயிரோடு எழுந்தது கர்த்தருடைய வார்த்தை உண்மையென்று நிரூபிக்கிறது. கிறிஸ்து உயிரோடு எழுவார் என்று திரும்ப திரும்ப சொல்லப்பட்ட வார்த்தைகள் சத்தியமானவை என்பது நிரூபிக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்து ஜீவனுள்ள தேவனின் குமாரன் என்பது நிரூபிக்கப் படுகிறது. இயேசுகிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் பாதாளத்தையும் வென்று சிலுவையிலே வெற்றிசிறந்தார். சாத்தான் அங்கு தோற்று போனான். நான் பிழைக்கப் படுகிறதினால் நீங்களும் பிழைப்பீர்கள். - (யோவான் 14:19) என்று இயேசுகிறிஸ்து கூறினார். அவர் உயிரோடு இருப்பதால் நாமும் பிழைக்கிறோம். நாமும் வாழ்கிறோம். அவர் உயிரோடு எழுந்திருக்கவில்லை என்றால் கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்களுடைய நம்பிக்கையும், நாம் அவர்களை காண்போம் என்ற நம்பிக்கையும் விருதாவாயிருக்கும். இப்போது நாம் நமக்கு பிரியமானவர்களை மீண்டும் சந்திப்போம் என்ற விசுவாசத்தோடு நாம் ஒருவரையொருவர் தேற்றுகிறோம். கிறிஸ்து எழுந்திருக்காவிட்டால் நம்முடைய நம்பிக்கை வீணாயிருக்குமே.

அவர் இங்கே இல்லை: தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்: கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் என்ற வார்த்தைகள் நிச்சயமும் சத்தியமுமாயிருக்கிறது. நம்முடைய கர்த்தர் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். ஆகவே நமக்கும் மரணத்தை கண்டு பயமில்லை. இயேசு ஜெயமெடுத்தபடியால் நாமும் ஜெயமெடுப்போம்.

## 14 பக்க தொடர்ச்சி...

சொல்லும் நகோமியின் வார்த்தைகள் மத்தியில்.

3) முற்றிலும் புதிதான சூழ்நிலை மக்கள் மத்தியில் வாழ வேண்டிய நிலையில்.

இவ்வாறான சூழ்நிலையில் துணிச்சலோடு அவள் தனது உறுதியான தீர்மானத்தை எடுக்கிறாள்.

என்று நாம் இந்த மூன்று பெண்களில் நம்மை யாரோடு ஒப்பிடுவோம்? தவறான தீர்மானங்களால் துன்பங்களுக்கு முகங் கொடுத்து தேவனை குற்றப்படுத்து பவளாக அல்லது தேவனைப் பின்பற்றுவேன் என்ற உறுதியோடு இருந்து உலக ஆசையின் காரணமாக பின்வாங்கி போனவளை போலவா அல்லது எந்தச் சூழ்நிலையிலும் தேவனுக்கு பிரியமானதைச் செய்ய எடுத்த தீர்மானத்தில் உறுதியாக இருப்பவளா?

சிந்திப்போம்!!!


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# பயிற்றுவிக்கும் ஆண்டவர்


**அருட்பணி அருளம்பலம் ஸ் ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி, பிலிமத்தலாவ


இந்தப் பணியைச் செய்யும் போதும் பயிற்சி மிக அவசியமாக இருக்கின்றது. ஆண்டவர் இயேசுவும் பேதுருவை தலைமைத் துவப் பணிக்கு அழைக்கும் போது பலவிதமான பயிற்சி களை வழங்கியதை நாம் காணலாம். ஆண்டவர் இயேசு பேதுருவை அழைத்து "என் பின்னே வா, நான் உன்னை மனிதர் களைப் பிடிக்கிறவர் ஆக்குவேன்." எனக் கட்டளை கொடுக்கின்றார். (மத் 4:18) இங்கு நான் என்பது கடவுளை இல்லையேல் அவரால் அனுப்பப்படும் மேசியாவைக் குறிக்கும் பதமாகும். எனவே கடவுளுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து கடவுள் பயமுள்ளவராக வாழ்வதே தலைமைத்துவத்தின் பிராதான இலக்கு என இயேசு கூறுகின்றார்.

கெனசரேத்துக் கடற்கரையில் பேதுரு மீன் பிடித்துக் கொண்டிருக்கும் சமயம் அதிக மீன்களைப் பிடித்தமையால் இயேசுவை நோக்கி நான் பாவியான மனுஷன், என்னை விட்டு அகன்று போம் என பேதுரு கூறுகின்றார். இதன் மூலம் கீழ்ப்படிவு, சுயநிலையை உணர்தல் போன்றவை தொடர்பாகப் பேதுருவிற்கு இயேசு பயிற்சி அளிக்கின்றார். மேலும் ஒரு தலைவர் சுயபெலத்தினால் காரியங்களை ஆற்றிவிட முடியாது, மாறாக கடவுள் பெலத்தால் மாத்திரமே ஆற்ற முடியும் என்பதை கடலின் மீது நடக்கும் சம்பவத்தின் மூலம் புகட்டுகின்றார். (மத் 14:25-35). இயேசுவின் சீடர் தமது பணிகளில் துன்பங்களுக்கு முகம் கொடுக்க எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பதை இயேசு கற்பித்து வந்தார். (மாற்கு 8:33) மேலும் மனித வாழ்வில் எப்போதும் விருப்பமானவைகள் மட்டுமே நடைபெறும் என்று எண்ணிவிடாமல் விருப்பமற்றவைகளுக்கு எவ்வாறு எம்மை தயார்படுத்துவதும் முகம்கொடுப்பதும் என்பதின் முக்கியத்துவத்தை இயேசு கற்பிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



(யோவான் 21:18). மேலும் பேதுரு இயேசு வோடு நெருக்கமாக வாழ்ந்த வேளைகளில் அவன் தவறு செய்ததை விட அவரை விட்டுத் தூரத்திலே பின் சென்றதன் காரணமாக அவன் தவறு செய்யத் தூண்டப்பட்டான். என இயேசு போதிக்கின்றார். உதாரணமாக மறுரூப மலையில், யவீருவின் மகளை உயிர்த்தெழச் செய்த சம்பவத்தில் பேதுரு இயேசுவோடு நெருங்கி வாழ்ந்து கொண்டு வந்தார். மாறாக சிலுவை மரண யாத்திரையின் போது அவரை விட்டு பின் சென்றதே அவரின் வீழ்ச்சிக்கு காரணம் என் அறிவுரை புகட்டுகின்றார்.

மத்தேயு 26:69-75 ஆகிய பகுதியில் பேதுரு, ஆண்டவர் இயேசுவை மறுதலிக்க மாட்டேன் எனக் கூறியிருந்த போதிலும் பெண்களுக்கு முன்பாக இயேசுவை மறுதலித்த போது இயேசு அவரை உற்றுப் பார்த்த வேளையில் மனங்கசந்து அழுகின்றார். இந் நிகழ்வின் மூலம் இயேசு தவறை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை, தவறுக்காக மனம் வருந்தும் மனப்பான்மை, தவறு செய்தவர் களை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை போன்றவற்றை பேதுருவுக்கு கற்பிக்கின்றார். மேலும் இயேசுவின் மரணத்தை அடுத்து விரக்தியுற்ற பேதுரு இதோ, நான் மீன் பிடிக்கச் செல்லுகின்றேன் எனக் கூறி மீன்பிடிக்கச் சென்றார். எனினும் எத்தகைய மீனும் அவருக்கு அகப்படவில்லை. (யோவான் 21:1-13). இயேசுவின் பிரசன்னம் இன்றி எதையும் செய்ய முடியாது என்ற உண்மையை இயேசு பேதுருவிற்கு கற்பித்துப் பின்னர் அதிக மீன்களை பிடிக்க அவருக்கு உதவி புரிகின்றார். மேலும் இயேசுவின் சீடனாக அல்லது பணியாளனாக அல்லது தலைமைத்துவப் பொறுப்பை ஏற்பவனாக மாற விரும்பும் ஒருவர் எல்லாவற்றையும் விட அதிகமாக இயேசுவை நேசிக்க வேண்டும் என்ற கட்டளையை பிறப்பிக்கின்றார். (யோவான் 21:15) இக்கட்ட ளைக்குப் பேதுரு செவி சாய்த்த சந்தர்ப்பத்தில் இயேசு அவரை நோக்கி ஆடுகளை மேய்ப்பாயாக எனக் கூறிப் பொறுப்பைக் கையளிக்கின்றார்.

எனவே, ஓர் தலைமைத்துவ யாத்திரையில் இயேசு பேதுருவை அழைத்துப் பயிற்றுவித்து பொறுப்பை கையளிப்பதை நாம் இங்கே காணலாம். இதே வகையில் ஆண்டவ ருடைய அழைப்பிற்கும் அவரால் வழங்கப்படும் பயிற்சிக்கும் நாம் கீழ்ப்படிந்து வாழும் போது அவர் எம்மைத் தலைவர்களாக உயர்த்துவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே எதிர்காலத் தலைவர்களாகிய நாங்கள் இயேசுவின் தலைமைத்துவப் பயிற்சி பாசறையில் அங்கத்தவர்களாக சேர்ந்திட முயற்சிப்போமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதவி

ராஜ் என்ற ஒரு மீனவர் நாவலடி கடற்கரை பிரசேதத்தில் ஒரு சிறிய ஓலை குடிசை ஒன்றில் வாழ்ந்து வந்தார். கடலின் மீன்பிடித்து அதை விற்றுவரும் பணத்தில் தனக்கு தேவையானவற்றை வாங்கி தனது வாழ்க்கையை நடத்தி வந்தார். அவருடைய மனைவியும் சீதா என்ற மகளும் அவரோடு வாழ்ந்து வந்தனர்.

ராஜ் தன்னிடம் யார் உதவி கேட்டு வந்தாலும் இல்லை என்று சொல்லாது, உதவி செய்யும் வழக்கத்தை கொண்டு இருந்தார். ஒருநாள் கடலில் அவருக்கு பெரிய அளவில் மீன் பிடிபடவில்லை. அவர் தனது வலையில் சிக்கிய சொற்ப மீன்களை விற்று மிக குறை வான பணத்தை பெற்றுக் கொண்டார். அந்த பணத்தை கொண்டு சாப்பிட தேவையான பொருட்களை வாங்க வேண்டும் என்று ராஜ் எண்ணிக் கொண்டு கடைக்குச் சென்றார்.

கடை வாசலில் ஒரு 70 வயது நிரம்பிய ஒரு பாட்டி தனது பேரக்குழந்தையுடன் கடைக்கு வந்து செல்லுவோரிடம் பண உதவி கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அந்த பாட்டிக்கு யாரும் உதவி செய்யவில்லை. ராஜ் இதை பார்த்து தன்னிடமிருந்து சொற்ப பணத்தில் பாட்டிக்கு ஒரு பெரிய தொகையை கொடுத்து விட்டு தனது மகளிற்கு மட்டும் உணவு வாங்கிச் சொன்றார். ஏனென்றால் பாட்டிக்கு உதவி செய்த பின்னர் அவரிடம் மகளிற்கு மட்டும் உணவு வாங்க பணம் மீதியாக காணப்பட்டது.

ராஜ் உணவுடன் வீட்டிற்கு வரும் போது அவரிடம் கடனாக பணம் பெற்றிருந்த நண்பர் ஒருவர் அந்த பணத்தை திருப்பி கொடுத்து விட்டு சென்றார். ராஜ் அந்த வேளையில் தேவனை துதித்து மகிழ்ச்சியுடன் வீடு சென்றார்.

'உன்னிடத்தில் கேட்கிறவனுக்கு கொடு" மத்தேயு 5:42

என் அன்பு தம்பி தங்கைகளே! இந்த கதையில் ராஜ்விடம் உதவி செய்வதற்கு அதிகளவு பணம் இல்லை. ஆனால் தன்னிடம் இருந்த குறைந்தளவான பணத்திலிருந்து உதவி செய்கிறான். நாம் அந்த நிலையில் இருந்திருந்தால் என்ன செய்து இருப்போம்? உன்னிடத்தில் கேட்கிறவனுக்கு கொடு என்று தான் இயேசப்பா கூறியுள்ளார். நம்மிடம் இருப்பவையிலிருந்து மற்றவர்களுக்கு உதவுவோமா.....

ஜெபம்:-

அன்புள்ள இயேசப்பா, என்னிடம் பலர் உதவி கேட்டும் அதை நான் செய்யாமல் இருந்ததிற் காக என்னை மன்னியுங்கள். இன்றிலிருந்து பிறருக்கு உதவி செய்ய கிருபை தாருங்கள். ஆமென்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்




உலகிலே அதிகக் கடினமான பணிக்களத்தை
எனக்கு தாரும் அங்கு உமக்கென்று
உழியம் செய்வேன்

- இராபர்ட் மாரீஸன்



*Honoring*

**Billy Graham**

**11/7/1918 - 2/21/2018**

Being a Christian is more
than just an
instantaneous
conversion - it is a daily
process whereby you
grow to be more and
more like Christ.

Billy Graham

தொடர்புகளுக்கும், ஜெபத் தேவைகளுக்கும் : ஆசிரியர், "வாலிபன்" சஞ்சிகை, மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை. 077 233 5106, 077 958 4930, 077 771 8847 E-mail : vaalipankyf@gmail.com | Web : www.vaalipan.com | Facebook : vaalipan | Twitter : vaalipan_kyf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org